# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

மானியக் கோரிக்கை எண். 26

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1-5 |
| 1. | நிறுவன அமைப்பு | 6 |
| 2. | நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு-11 | 6 |
| 3. | 1970 முதல் 2023 வரையிலான சாதனைகள் | 7 |
| 4. | நகர்ப்புற ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாடு - பின்பற்றப்படும் அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகள் | 8-10 |
| 5. | தற்போதைய திட்டப் பணிகள் | 10-17 |
| 6. | தற்போது நடைபெற்று வரும் பெரும் திட்டங்கள் | 17-27 |
| 7. | பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 28-36 |
| 8. | மாநில நிதியுதவித் திட்டங்கள் | 36-47 |
| 9. | சென்னை மாநகரின் நீர்வழிகளை மறுசீரமைத்தல் - | 48-50 |
| 10. | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (SCP) (2022-2023) | 50-51 |
| 11. | நில உரிமை/ விற்பனைப் பத்திரங்கள் வழங்குதல் | 51-55 |
| 12. | சமுதாய மேம்பாட்டுப் பணிகள் | 55-59 |
| | முடிவுரை | 60 |

## மானியக் கோரிக்கை எண்.26

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2023 – 2024

### முன்னுரை

**"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"** என்ற குறிக்கோளுடன் தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக்குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வாழ்விட மேம்பாட்டினை ஏற்படுத்த **முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால்** 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தவும் அவ்விடங்களைக் குடியிருக்கத்தக்கதாக மேம்படுத்தவும் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட திறனுக்கேற்ற வீட்டுவசதி வழங்கும் நோக்கத்துடன் 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1971) இயற்றப்பட்டது.

குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொதுப் பயன்பாட்டிற்கான இடம் போன்ற போதுமான அடிப்படை வசதிகளுடன் வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்தினை உருவாக்குவது அவசியமாகின்றது. அதற்கிணங்க, இந்நோக்கினைக் கருத்தில் கொண்டு, இவ்வாரியத்தால் அப்பகுதிகளின் முழுமையான வாழ்விட மேம்பாட்டிற்கு அரசு முழு முயற்சியினை மேற்கொண்டுள்ளது. இவ்வாரியத்தின் முதன்மைப் பங்கானது, குடிசைப்பகுதிகளை அகற்றுதலுக்கு மாறாக, குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், மற்றும் அவற்றை ஏற்புடைய வாழ்விடமாக மாற்றுதல் ஆகும். எனவே, அரசாணை (நிலை) எண்.103, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 01.09.2021-இல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயர் **"தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்"** என அரசால் மாற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்கூறப்பட்ட பெயர் மாற்றத்திற்குச் சட்டபூர்வ

அங்கீகாரம் வழங்க, தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தில் அரசால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நகரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் செறிந்துள்ளதன் காரணமாகக் கிராமப்புற ஏழை மக்கள் அவர்களது வாழ்வாதாரத்திற்காக வேலை வாய்ப்பைத் தேடி நகரங்களுக்கு ஈர்க்கப்படுகின்றனர். நகரமயமாதல், பொருளாதார மேம்பாட்டினை எளிதாக்கினும், துரித நகரமயமாதலின் காரணமாகக் குடிசைப்பகுதிகள் பெருகிச் சமூக மற்றும் கொள்கை அளவிலான சவால்களை ஏற்படுத்துகின்றன.

தமிழ்நாடு, நாட்டின் நகரமயமாக்கப்பட்ட முதன்மை மாநிலங்களில் ஒன்றாகும். இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்கட் தொகை 2023–ஆம் ஆண்டில் 60 சதவிகிதத்தை எட்டும் என்றும், 2031–ஆம் ஆண்டில் 67 சதவிகிதமாக உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. துரித நகரமயமாதலின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட பிரிவினர்களான நகர

ஏழை மக்கள், துயரமான சமூகப் பொருளாதார நிலைகளில் வாழ்கின்றனர். எனவே, மக்கள் நலனை கருத்தில் கொண்ட இந்த அரசு குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் திறனுக்கேற்ற வீட்டு வசதி வழங்கல் போன்றவற்றை ஈடுபாட்டுடன் உற்று நோக்க வேண்டிய முக்கிய பகுதிகளாகக் கருதி இவற்றை அடைய முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

# 2023–2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ. எண் | துறைகள் | | வருவாய் | மூல தனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை– தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 167,75,95 | — | 211,50,00 | 379,25,95 |
| 2. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>736,57,66 | —<br>--- | —<br>--- | 1<br>736,57,66 |
| 3. | கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ()பதிவாளர்) | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>14,05,31 | —<br>--- | –<br>1 | 1<br>14,05,32 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | அனுமதித்தது | 50,00,02 | 2,000,00,03 | 8,015,00,01 | 10,065,00,06 |
| 5. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | அனுமதித்தது | 32,16,14 | 1 | — | 32,16,15 |
| **6.** | **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்** | **அனுமதித்தது** | **2,727,18,07** | **4** | **1** | **2,727,18,12** |
| 7. | சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் | அனுமதித்தது | 14,56,05 | — | — | 14,56,05 |
| | மொத்தம் | சாட்டியது<br>அனுமதித்தது | **2**<br>**3,742,29,20** | …<br>**2,000,00,08** | **–**<br>**8,226,50,03** | **2**<br>**13,968,79,31** |

## 1. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு குடிசைப்பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971–இன் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிறுவன அமைப்பினை விளக்கும் படம் **இணைப்பு–I இல்** விவரிக்கப்பட்டுள்ளது.

## 2. நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு–11

"நிலையான மேம்பாடு இலக்கு–11–இன் (Sustainable Development Goal–11) கீழ் 2030–ஆம் ஆண்டிற்குள் "அனைவரும் போதுமான, பாதுகாப்பான மற்றும் திறனுக்கேற்ற வீட்டுவசதி மற்றும் அடிப்படை வசதிகள் பெறுவதை உறுதி செய்தல், நகர்ப்புற குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல்" போன்றவை இலக்காக உள்ளன. இந்த இலக்கினை அடைதல் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குறிக்கோளாகும்.

## 3. 1970 முதல் 2023 வரையிலான சாதனைகள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 4.86 இலட்சத்திற்கும் அதிகமான அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் (மறுகட்டுமானம் உட்பட) சென்னை மற்றும் பிற நகரங்களில் கட்டப்பட்டுள்ளன. மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (MUDP) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNUDP) 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 393 அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 1,78,714 அடுக்குமாடி குடியிருப்புகள் பராமரிக்கப்படுகின்றன. அவற்றுள், சென்னை மாநகரில் 203 திட்டப்பகுதிகளில் 1,14,158 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் மற்றும் இதர நகரங்களில் 190 திட்டப்பகுதிகளில் 64,556 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் உள்ளன.

## 4. நகர்ப்புர ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாடு – பின்பற்றப்படும் அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகள்

- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், அதன் முதல் பத்தாண்டு சேவைகளில், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்றுதல், சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்றவற்றுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டும் பணிகளில் கவனம் செலுத்தியது. இக்குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- பின்னர் நகர ஏழை குடும்பங்களின் விருப்பத்திற்கிணங்க, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டங்களின் கீழ் உறைவிடத்திற்கான நிதியுதவி மற்றும் நில உரிமத்துடன் **"உள்ளது உள்ளபடி"** நிலையில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டன.

- நீர் வழிகளின் கரைகள், சாலையின் ஓரங்கள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் இடங்களில் ஏழ்மை நிலையில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்குச் சமுதாய மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் மாற்றிடங்களில் வழங்கப்படுகின்றன.

- பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள் மற்றும் அதன் அருகிலுள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் மறுகட்டுமானத் திட்டங்களின் கீழ் கட்டப்படும் புதிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுகின்றனர்.

- நகரங்களின் குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்க தீப்பிடிக்காத வீடுகள் பெருமளவில் கட்டப்பட்டன.

- அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப்பகுதிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்தவும், அக்குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திடவும் இக்குடியிருப்புத்

திட்டப் பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரிக்கக் குடியிருப்போர் நலச்சங்கங்களை உருவாக்க பயனாளிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## 5. தற்போதைய திட்டப்பணிகள்

### 5.1 வாழ்விடங்களிலேயே உட்கட்டமைப்புகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

நகர்ப்புற ஏழைகள் நெருக்கமாக வாழும் ஆட்சேபணையற்ற நிலங்களில் அவர்தம் வாழுமிடங்களில் சாத்தியமான தளப்பரப்பு குறியீட்டின் (FSI) அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அக்குடியிருப்புகள் அப்பகுதியில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இக்குடியிருப்புகள், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதி, மின்தூக்கி, சாலைகள், தெரு மின்விளக்குகள், கான்கீரிட் நடைபாதை, மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளுடன் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை மற்றும் கழிவறை உள்ளன.

இக்குடியிருப்புகள் தகுதி வாய்ந்த நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

### 5.2 அடிப்படை மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளுடன் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்

சாலையின் ஓரங்கள், நதிக்கரைகள் மற்றும் பொதுத் திட்டப்பணிகளுக்குத் தேவைப்படும் இடங்கள் போன்ற பகுதிகளில் வாழும் நகர ஏழைக் குடும்பங்களுக்கு அவர்களது வாழ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட இயலாது. இக்குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய அருகில் உள்ள காலி நிலங்களில், மின்தூக்கி, குடிநீர் வசதி, கழிவுநீரகற்று வசதி மற்றும் சமூக வசதிகளான பள்ளிகள், நூலகம், பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், பேருந்து நிலையம், தொழிற்பயிற்சி நிலையம், சிறு கடைகள், பால் விற்பனை நிலையம், சமுதாயக் கூடம் போன்ற வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒருங்கிணைந்த நகரங்களாக மேம்படுத்தப்படுகின்றன. மறுகுடியமர்வின் போது வாழ்வாதாரங்களை எளிதாக்க இடமாற்று தொகை

மற்றும் வாழ்வாதாரத் தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. மேலும், மறுகுடியிருப்பு திட்டப்பகுதியில் அக்குடும்பங்கள் வேலை வாய்ப்புப் பெறுவதை எளிதாக்க, வாழ்வாதாரத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

## 5.3 பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்

காலகடப்பு, நீண்டகால பயன்பாடு மற்றும் மாறுபட்ட தட்பவெப்ப நிலையின் காரணமாக, பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில பழுதடைந்து அப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் நிலையில் உள்ளன. இக்குடியிருப்புகளின் பாதிப்புத்தன்மை குறித்து தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, நிலையற்ற குடியிருப்புகள் எனப் பரிந்துரைக்கப்பட்ட பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்கள் அவர்கள் முன்னர் வாழ்ந்த

குடியிருப்புகளைக் காலி செய்து கட்டுமான காலத்தில் திட்டப்பகுதிக்கு வெளியே வாடகை செலுத்தி வாழ்வதற்கு ஏதுவாக முன்னர் வழங்கப்பட்ட ஒரு முறை கருணைத் தொகையான ரூ.8,000/– தற்போது ரூ.24,000/– ஆக உயர்த்தி அரசாணை 4(D) எண். 48, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22.11.2021–இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்புதிய குடியிருப்புகள் முன்னர் சிதிலமடைந்த குடியிருப்புகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பெரும்பாலான திட்டப்பகுதிகளில் அதிக தளப்பரப்பு குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு கூடுதலாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அத்திட்டப்பகுதிகளில் வாழும் குடியிருப்புதாரர்களின் விரிவாக்கப்பட்ட குடும்பங்களுக்கும் அருகில் வாழும் ஏழை எளிய குடும்பங்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## 5.4 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல்

நகரங்களில், சுகாதாரமற்ற நிலையில் கழிப்பிட வசதியின்றி ஓலைக்குடிசை அல்லது ஓட்டுக் கூரை வேயப்பட்ட தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும்

நில உரிமை கொண்ட ஏழைக் குடும்பங்களால் தங்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ள இயலவில்லை. இக்குடும்பங்களுக்கு கான்கிரீட் கூரையுடன் நிலையான வீடுகளைத் தாமாகக் கட்டிக் கொள்வதற்கு ஏதுவாக மானியம் வழங்கப்படுகின்றது.

## 5.5 நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்விடங்கள் மேம்பாடு

தாமாக வீடுகள் கட்டும் முறையின்கீழ் வீடுகள் கட்டப்பட்டுள்ள நகர ஏழைக் குடும்பங்களின் வாழ்விடங்களில் அப்பகுதிகளை அவர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு மேம்படுத்த தார் சாலைகள், தெரு மின்விளக்குகள், கான்கிரீட் நடைபாதை, ஆழ்துளைக் குழாய் கிணறுகள், பொதுக் குடிநீர் குழாய், மழைநீர் வடிகால் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 5.6 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள்– புனரமைப்பு மற்றும் பராமரிப்பு

அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளின் நிலைத்தன்மை மேம்பாட்டிற்கும், குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித்தன்மையை அதிகரிக்கவும் கீழே கூறப்பட்டுள்ள புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### 5.6.1 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளுக்குப் புனரமைப்புப் பணிகள்

அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித் தன்மையை மேம்படுத்துதல் போன்ற புனரமைப்புப் பணிகள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.6.2 அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரித்தல்

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் ஆயுட் காலம் மற்றும் கட்டமைப்பு நிலைத்தன்மையினை உறுதிப்படுத்த, பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குடியிருப்புகளைப் பராமரிக்கக் குடியிருப்புதாரர்கள் குடியிருப்போர் நல சங்கங்கள் உருவாக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## 5.7 மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்கள்

அண்ணா பல்கலைக்கழகம் கிண்டி தொழில்நுட்ப கல்லூரி, CUBE, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை மற்றும் அண்ணா பல்கலைக்கழகம்–BIT வளாகம் – திருச்சி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்கல்வி நிறுவனங்கள் மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்களாக இயங்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்கள் அவர்களுக்கான கட்டடப் பணிகளின் தரத்தினைப் பல்வேறு நிலைகளில் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்து வருகின்றன.

## 5.8 திறனுக்கேற்ற வீட்டு வசதிக்கான புதிய தொழில்நுட்பங்கள்

பாதுகாப்பான, நிலைத்த மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு உகந்த வீடுகளை விரைந்து கட்ட கட்டுருவாக்க கான்கிரீட் (Prefabricated concrete), அலுமினியம் சாரத்தினைக் கொண்ட ஒற்றைக் கட்டுமானத் தொழில்நுட்பம் (Monolithic Concrete Structure) போன்ற நவீனக் கட்டுமானத் தொழில் நுட்பங்களை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் பயன்படுத்துகின்றது.

## 5.9 இதர முயற்சிகள்

நகர்ப்புற ஏழைகள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு மற்றும் சுயவாழ்வாதாரம் பெறுதல் இன்றியமையாததாகும்.

அவர்களிடையே வேலைவாய்ப்புத் திறனை ஊக்குவிக்க திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பினை உறுதி செய்ய வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

## 6. தற்போது நடைபெற்று வரும் பெரும் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற ஏழைகளுக்கும் திறனுக்கேற்ற வீட்டுவசதி வழங்கல் எனும் தொலைநோக்கினை அடைய கீழே கூறப்பட்டுள்ள பெரும் திட்டப்பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

## 6.1 பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் (நகர்ப்புறம்) – அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டம்

நகர ஏழை மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவு செய்ய பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒன்றிய, மாநில அரசுகளின் மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் அடிப்படை கட்டமைப்புகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் வகைப்பாட்டின் கீழ் தனி வீடுகள் கட்டப்படுகின்றன.

தமிழ்நாட்டின் நகரப்பகுதிகளில் அனைவருக்கும் வீட்டு வசதி (Housing For All) திட்டப்பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மாநில அளவிலான முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

## அனைவருக்கும் வீட்டுவசதி (நகர்ப்புறம்) நிதி ஆதாரம்

| வ. எண். | விவரம் | பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி (அடுக்குமாடி குடியிருப்புகள்) (ஒரு குடியிருப்பிற்கான தொகை ரூ.இலட்சத்தில்) | பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் (தனி வீடுகள் ) (ஒரு வீட்டிற்கான தொகை ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | ஒன்றிய அரசின் மானியம் | 1.50 | 1.50 |
| 2 | மாநில அரசின் மானியம் | 7.50 to 13.00 | 0.60 |
| 3 | பயனாளிகள் பங்களிப்புத் தொகை | 1.00 to 6.00 | 0.90 |
| **மொத்தம்** | | **10.00 to 17.00** | **3.00** |

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் ஒருபகுதியாக 5.59 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகள் ரூ.29239.07 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றுள் 3.16 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகளுக்கானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 1.92 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகளுக்கான பணிகள்

பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டப்பணிகளுக்காக இதுவரை ரூ.15252.57 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், 1,13,467 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 1,29,758 வீடுகளுக்கான பணிகளை 2023–24 மற்றும் 2024–25 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.1.1 பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டுவசதி – அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

நகர்ப்புறப் பகுதிகளில் ஆட்சேபணையற்ற, நெருக்கமான குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கும் அதே இடங்களிலும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினைச் சார்ந்த குடும்பங்களுக்கும், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றும் வசதி, சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

ஒரு குடியிருப்பிற்கு ரூ.1.50 இலட்சம் மானியமாக ஒன்றிய அரசு வழங்குகிறது. மாநில அரசால் ஒரு குடியிருப்பிற்கு

ரூ.7.50 இலட்சத்திலிருந்து ரூ.13.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள தொகையினைப் பயனாளிகள் பங்களிப்பாக பெறப்படுகிறது. அதிகபட்ச தரை பரப்பளவு குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு குடியிருப்புகள் கட்டப்படும் மறுகட்டுமான திட்டங்களில் பயனாளிகளுக்கு ஏற்படும் நிதிச் சுமையினைக் குறைக்க அரசாணை (4D) எண். 54, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 17.12.2021–இல் பயனாளிகள் பங்களிப்பு தொகையினை மாதத் தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்களிப்பு தொகையினை மேலும் குறைக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் உறைவிட நிதி ஆகியவற்றிலிருந்து திட்டச் செலவின் ஒரு பகுதியினைப் பெற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்பணிகளின் ஒரு பகுதியாக, 1,50,898 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.16749.29 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 37,431 அடுக்குமாடி

குடியிருப்புகளுக்கானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 88,012 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் 25,455 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கானப் பணிகள் 2023-24-ஆம் ஆண்டில் தொடங்கப்படும். இத்திட்டப்பணிகளுக்காக இதுவரை ரூ.8595.92 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்த மாவட்ட வாரியான விவரம் **இணைப்பு-II இல்** விவரிக்கப்பட்டுள்ளது.

### 6.1.2 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் – தனி வீடுகள் கட்டுதல்

நகரங்களில் வாழும் நில உரிமையுடன் கூடிய மனையினை கொண்ட வீடற்ற, ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு கீழ் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் நகர ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்ட மானியமாக குடும்பம் ஒன்றிற்கு ரூ.2.10 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டப் பயனாளிகள் அவர்களின் வீடுகளைத் தாமாகக் கட்ட வேண்டும்.

இத்திட்டத்தின் ஒருபகுதியாக, 4,08,158 தனி வீடுகள் ரூ.12,489.77 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட

ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் 2,78,400 வீடுகள் முடிவுற்றுள்ளன. 1,03,717 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மற்றும் 26,041 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.6,656.65 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்த மாவட்ட வாரியான விவரம் **இணைப்பு-III இல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளில் இத்திட்டப்பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு:**

| **வ. எண்.** | **வீடுகள் விவரம்** | **குடியிருப்புகள் / வீடுகள்** |
|---|---|---|
| 1 | ஒப்புதல் வழங்கப்பட்டவை | 78,476 |
| 2 | முடிவுற்றவை | 9,412 |
| 3 | முன்னேற்றத்திலுள்ளவை | 32,586 |

**மேற்கூறப்பட்ட இரண்டு திட்டங்களின் கீழ் பணிகளை நிறைவேற்ற 2023-24ஆம் ஆண்டிற்கு அரசால் ரூ.2281.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

### 6.1.3 பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில்

அடுக்குமாடிக் குடியிருப்புகள் முன்னர் கட்டடப்பட்டன. இக்குடியிருப்புகளில் சில சூழ்நிலை பாதிப்புகள், தட்பவெப்ப மாறுபாடு, காலக்கடப்பு மற்றும் நீண்ட காலப் பயன்பாடு காரணமாக சிதிலமடைந்து இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்துவதாக உள்ளன. எனவே, அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு திட்டப்பகுதிகளை ஆய்வு செய்து உறுதித்தன்மையின் அடிப்படையில் மறுகட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பழுதடைந்த குடியிருப்புகளை இடிக்கப் பரிந்துரைக்கின்றது. மறுகட்டுமானத்திற்குப் பின்னர், புதிதாகக் கட்டப்படும் இக்குடியிருப்புகள், அனுமதிக்கப்பட்ட தரைப் பரப்பளவு குறியீட்டினைத் திறமையான வகையில் பயன்படுத்தி புதுமையான மற்றும் வசதியான வடிவங்களில் கூடுதல் குடும்பங்கள் வாழ்வதற்குத் தேவையான பொது அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும்.

மறுகட்டுமானம் செய்யப்படும் புதிய குடியிருப்புகள், பழைய குடியிருப்புகளில் முன்னர்

வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். கூடுதலாகக் கட்டப்பட்ட குடியிருப்புகள் இதே திட்டப்பகுதிகளின் அருகில் வாழும் வீடற்ற நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

இதுவரை, மொத்தம் 32,813 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானத்திற்காகக் கண்டறியப்பட்டு, அவற்றுள் 11,490 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 6,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 14,461 அடுக்குமாடிக் குடியிருப்புகள் படிப்படியாக மறுகட்டுமானம் செய்யப்படும்.

### 6.1.4 இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள்

இத்திட்டத்தின் கீழ் தங்கும் இடங்கள் / குடியிருப்புகளைக் கொண்ட, திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் வீட்டுவசதி அளித்து அவர்கள் வாழ்வினை எளிதாக்க, இவ்வளாகங்களைப் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அவர்களது சொந்த நிலத்தில் கட்டமைத்து, இயக்கி, பராமரிக்க அனுமதிக்கப்படும். இத்திட்டங்களுக்குக் கடைபிடிக்கப்படும் புதுமையான தொழில் நுட்பங்களுக்கான மானியம் ஒன்றிய அரசால் வழங்கப்படும். மேலும் உள்ளாட்சி நிறுவனங்களின் மூலம் தேவையான அடிப்படை வசதிகளும் அமைக்கப்படும். இத்திட்டப் பணிகளைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி நிர்வகிக்க ஒன்றிய அரசுடன் ஒரு புரிந்துணர்வு (MoA) ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் கீழே கூறப்பட்டுள்ள நகரங்களில், மாற்றுத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள் கட்டும் கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண். | நகரம் | நிறுவனம் | நவீன தொழில் நுட்பங்களுக்கான மானியம் (ரூ.கோடியில்) | தங்கும் இடங்கள் / குடியிருப்புகள் |
|---|---|---|---|---|
| **அ) முன்னேற்றத்தில் உள்ளவை** | | | | |
| 1 | சென்னை | தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) | 37.44 | 18720 |
| 2 | ஸ்ரீபெரும்புதூர் | SPR கட்டுமானம் தனியார் நிறுவனம் | 7.95 | 3969 |
| 3 | ஒசூர் | TATA மின்னணு சக்தி நிறுவனம் | 28.62 | 13500 |
| **ஆ) தொடங்கப்பட உள்ளவை** | | | | |
| 4 | சென்னை | சென்னை பெட்ரோலியம் நிறுவனம் | 2.88 | 1040 |
| 5 | சென்னை | SPR கட்டுமானம் நிறுவனம் | 10.13 | 5045 |
| 6 | ஸ்ரீபெரும்புதூர் | SPR நகரம் எஸ்டேட் தனியார் நிறுவனம் | 36.22 | 18112 |
| **மொத்தம்** | | | **123.24** | **60386** |

## 7. பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

வீட்டுவசதித் துறையினை மேம்படுத்த உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்முகத் தன்மை கொண்ட நிதி நிறுவனங்கள் நிதியுதவி வழங்கியுள்ளன.

(i) திறனுக்கேற்ற வீட்டுவசதித் திட்டங்களில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்கப்படுத்தவும், கொள்கை சீர்திருத்தம் மூலம் நகர வீட்டு வசதித் துறையினை வலுப்படுத்துதல்.

(ii) தமிழ்நாடு நகர வீட்டுவசதி நிறுவனங்களின் நிலைத்தத் தன்மையினை உயர்த்தவும் அதனை வலுப்படுத்துதல் மற்றும்

(iii) சென்னை மூன்றாவது முதன்மை திட்டத்தினைத் தயார் செய்வதற்கும் உலக வங்கி நிதியுதவி வழங்குகின்றது.

ஆட்சேபணைக்குரிய பகுதிகளில் வாழும் குடும்பங்கள், நகர்ப்புற ஏழை மக்கள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வீட்டுவசதியினை

ஏற்படுத்துவதற்கும், மண்டல திட்டங்களைத் தயார் செய்வதற்கும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி வழங்குகிறது.

## 7.1 உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர்ப்புற ஏழைகளுக்கான தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தினை ரூ.5363 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில், உலக வங்கியின் கடனுதவி ரூ.3750 கோடியுடன் (500 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) செயல்படுத்த திட்ட முன்மொழிவுகள் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டம் இரண்டு வெவ்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

**7.1.1 தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டம்:** இத்திட்டமானது 390 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மொத்த மதிப்பீட்டில் உலக வங்கி

நிதியுதவியுடன் வீட்டு வசதிக் கொள்கைகள், நிறுவனங்கள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை வலுப்படுத்த அரசிற்கு ஆதரவு அளிக்கும். இத்திட்டம் கீழே கூறப்பட்டுள்ள மூன்று கட்டமைப்பு ஆதாரங்களுடன் செயலாக்கத்தில் உள்ளது.

(i) உள்ளடக்கிய மற்றும் சிறந்த வீட்டு வசதி துறையின் மேம்பாட்டிற்கு ஆதரவு அளிக்க கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல்.

(ii) திறனுக்கேற்ற வீடுகள் வழங்குவதை அதிகரிக்க எளிதான சூழலை மேம்படுத்துதல்

(iii) திறனுக்கேற்ற வீட்டு வசதி சந்தையில் தனியார் நிறுவனங்களின் பங்கேற்பினை அதிகரித்தல்

**(அ) முதலாவது தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டத்தின்** கீழ் கொள்கை மேம்பாட்டுக் கடன் ரூ.1492.40 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) கொள்கை மற்றும் நிறுவனங்களை

வலுப்படுத்துதல், வீட்டு வசதிக்கான நடைமுறைகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காகப் பெற திட்டமிடப்பட்டு, கடன் தொகை ரூ. 1492.40 கோடி தமிழ்நாடு அரசின் வரவு செலவு திட்டத்தின் நிதி உலக வங்கியில் முழுமையாக விடுவிக்கப்பட்டது. இத்திட்டப்பணிகள் 23.07.2020 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 30.06.2022–இல் நிறைவு பெற்றது.

**ஆ) இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறையினை வலுவூட்டும் திட்டம்,** ரூ.1545.90 கோடி (190 மில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் அமைப்பு மற்றும் நிறுவனங்கள் வலுப்படுத்த திட்டமிடப்பட்டு மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(i) திறனுக்கேற்ற வீட்டுவசதியினை அதிக அளவில் பெறும் வண்ணம் நிறுவனங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்துதல்,

(ii) திறனுக்கேற்ற வீட்டுவசதியினைப் பெருமளவில் ஏற்படுத்தும் வண்ணம் ஏதுவான, சாதகமான சூழலை அதிகப்படுத்துதல் மற்றும்

(iii) வீட்டுவசதிப் பிரிவில் நிலைத்த தன்மையையும் பருவநிலை மாற்றங்களின் மீள் தன்மையையும் அதிகரிக்கும் வகையில் வரைமுறைகளை ஏற்படுத்துதல்.

இத்திட்டப்பணிகள் 30.09.2022 முதல் செயலாக்கத்தில் உள்ளன. அரசாணை (நிலை) எண்.18, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 08.02.2023–இல் இத்திட்டப்பணிகளின் செயலாக்கத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**7.1.2 தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்:** 72 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.504 கோடி) திட்ட மதிப்பீட்டில், 50 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி உலக வங்கியிடமிருந்தும்,

22 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு இணை நிதியாகத் தமிழக அரசிடமிருந்தும் பெற்றது, இரண்டாவது தமிழ்நாடு வீட்டு வசதித் துறையினை வலுவூட்டும் திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசு வீட்டுவசதி நிறுவனங்களின் செயலாக்கத்தினை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கைகளைத் தூண்டுதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.161.35 கோடி உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

### 7.2 தமிழ்நாட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நகர ஏழை மக்களுக்கான வீட்டுவசதித் திட்டம்

இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழைகள் போன்ற பாதிப்புக்குள்ளாகக் கூடிய சமூகங்களுக்குத் திறனுக்கேற்ற வீட்டுவசதி மற்றும் மண்டல திட்டமிடல் ஆகிய கூறுகளைக் கொண்ட உள்ளடக்கிய, மீள் தன்மையுடைய மற்றும் நிலையான வீடுகளுக்கான திட்டப்பணிகளை ரூ.1595 கோடி (215 மில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பீட்டில்

செயல்படுத்த இந்த அரசு ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ஒரு கடன் உடன்படிக்கைக்குக் கையெழுத்திட்டுள்ளது.

நகர்ப்புற ஏழை மக்களை உள்ளடக்கிய, மீள் தன்மையுடைய மற்றும் நிலையான வீடுகளுக்கான இத்திட்டத்தின் கீழ் 2745 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.419.35 கோடி மதிப்பீட்டில் கீழே கூறப்பட்டுள்ளவாறு கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

| வ. எண். | மாவட்டம் / திட்டப்பகுதி பெயர் | குடியிருப்புகள் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் – வல்லம் அய்யனார் கோவில் பகுதி–II | 969 | 149.32 |
| 2. | சிவகங்கை – கழனிவாசல் | 900 | 130.23 |
| 3. | திருநெல்வேலி – ரெட்டியார்பட்டி பகுதி–II | 876 | 139.80 |
| **மொத்தம்** | | **2745** | **419.35** |

மேலும், நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் பகுதியில் 520 வீடுகளுக்கான பணிகள் 2023–24 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் இதர நகர பகுதிகளில் வாழ்விடங்கள் மறுமேம்பாடு, மறுகட்டுமானம், புதிய குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக 3000 குடியிருப்புகள் இத்திட்டத்தின் ஒருபகுதியாக மேற்கொள்ள முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் வகைப்பாடு 2–இன் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தால் நிர்வகிக்கப்படும் உறைவிட நிதிக்குத் தொழில்துறை வீட்டுவசதி அமைக்க, குறைந்த வருமானத்தில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குப் பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் வீடுகள் கட்ட ரூ.259.00 கோடி நிதி ஆதரவு அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் வகைப்பாடு 3–இன் கீழ் தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் முன்மொழியப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மண்டலத் திட்டங்கள் தயார் செய்ய

நிதியுதவி வழங்குவதுடன், மண்டல ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுடன் கூடிய திறனுக்கேற்ற வீடுகள், பொருளாதார முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கைப் பேரிடர் மேலாண்மை போன்றவற்றை செயல்படுத்த, ஆசிய வளர்ச்சி வங்கி, நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு நிதி ஆதாரம் வழங்கும்.

## 8. மாநில நிதியுதவித் திட்டங்கள்

### 8.1 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகள் புனரமைப்பு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை மற்றும் இதர நகரங்களில் கீழே கூறப்பட்டுள்ளவாறு 1.78 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பராமரித்து வருகின்றது.

| வ. எண் | மாவட்டங்கள் | திட்டப் பகுதியின் எண்ணிக்கை | அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 203 | 1,14,158 |
| 2 | இதர மாவட்டங்கள் | 190 | 64,556 |
| | **மொத்தம்** | **393** | **1,78,714** |

இக்குடியிருப்புகளுக்குப் பராமரிப்புப் பணிகள் உரிய காலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசால் வழங்கப்படும் நிதியுதவியினைக் கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுப் பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பொலிவினை மேம்படுத்த புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புனரமைப்புப் பணிகளுக்காகக் கீழே கூறப்பட்டுள்ள முக்கியப் பணிகள் முன்மொழியப்பட்டு உள்ளன.

- குடிநீர் வசதி அமைப்புகளை மேம்படுத்துதல்
- பழுதடைந்த கழிவுநீர் குழாய்களை மாற்றியமைத்தல்
- மின் இணைப்புப் பெட்டிகள் (Panel Board) பாதுகாப்பான முறையில் அமைத்தல்
- தேவைப்படும் வசிப்பிட அறைகளில் UPVC சன்னல்கள் அமைத்தல்

- குளியலறை மற்றும் கழிவறையில் உள்ள சேதமடைந்த கான்கிரீட் ஜன்னல்களைப் புதிதாக மாற்றியமைத்தல்
- வெளிப்புறச் சுவர்களை முழுமையாகப் பழுது நீக்கி முழுமையாக வண்ணம் பூசுதல்
- தளம், படிக்கட்டுகள் மற்றும் மாடித்தளம் போன்றவற்றைப் பழுதுபார்த்தல்

**(i) அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் புனரமைப்பு, பகுதி–I**

சென்னை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 65 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 26,483 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.68.72 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இப்பணிகள் 4 திட்டப்பகுதிகளில் முடிவுற்றுள்ளன மற்றும் 52 திட்டப்பகுதிகளில் முன்னேற்றத்தில் உள்ள பணிகள் 2023–ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் புனரமைப்பு, பகுதி–II**

மேலும், சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 28 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 23,546 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.79.15 கோடி செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் 2023–24ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

**8.2 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகள்**

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான புனரமைப்புப் பணிகளின் கீழ் மேற்கொள்ளப்படாத மாடிப்படிகள், பால்கனி, தரைத்தளம், கூரைத்தளங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல், கூரைத்தளத்தில் ஓடுகள் பதித்தல், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று குழாய்கள், கழிப்பிட பீங்கான்கள் போன்றவைகளை மாற்றுதல் போன்ற பணிகள் குடியிருப்புகளை நன்முறையில் பராமரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றன.

இப்பணிகள் மாநில அரசின் நிதி மற்றும் இதர நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படும். இதுவரை 125 திட்டப்பகுகளில் கட்டப்பட்டுள்ள 77,370 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.60.28 கோடி செலவில் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 98 திட்டப்பகுதிகளில் உள்ள 44,452 குடியிருப்புகளுக்கானப் பணிகள் முடிவுற்றுள்ளன மற்றும் 2022–23 ஆம் ஆண்டில் ரூ.43.21 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 19 திட்டப்பகுதிகளில் ரூ.17.07 கோடி செலவில் 2023–24–ஆம் ஆண்டில் பணிகள் முடிவுறும்.

### 8.3 உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து கீழ்க்காணும் பணிகளுக்கு நிதி ஆதாரம் வழங்கப்படுகிறது.

### 8.3.1 பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதியினை பயன்படுத்திப் பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டுள்ள திட்டப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் அமைக்கப்படுகின்றன. தார் சாலைகள், கான்கீரிட் நடைபாதைகள், மழைநீர் வடிகால், தெரு மின்விளக்குகள் மற்றும் குடிநீர் விநியோக அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் இத்திட்டப்பகுதிகளில் அமைக்கப்படும். இப்பணிகள் 307 திட்டப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.32.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 8.3.2 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்

பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டங்களில் நிறைவேற்றப்படும் அடிப்படை வசதிகளுக்கான பணிகள் மற்றும் கீழே கூறப்பட்டுள்ள இதரப் பணிகளை ரூ.364.80 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்ற அரசால் 2022-23-ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடி) | குறிப்பு |
|---|---|---|---|
| **அ) பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டங்கள்** | | | |
| 1 | பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 46 திட்டப்பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கான பணிகள் | 252.20 | முன்னேற்றத்திலுள்ளன |
| 2 | பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 14 திட்டப்பகுதிகளில் குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று பணிகள் மற்றும் மின் சேவை இணைப்பு பணிகள் | 59.22 | முன்னேற்றத்திலுள்ளன |
| | **மொத்தம் (அ)** | **311.42** | |
| **ஆ) அடிப்படை வசதிகள்** | | | |
| 1 | கோயம்புத்தூரில் 12 திட்டப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் | 1.69 | முன்னேற்றத்திலுள்ளன |
| 2 | சென்னையில் 13 அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளுக்குக் குடிநீர் விநியோக அமைப்புகள் | 16.73 | பணிகள் தொடங்கப்பட உள்ளன |
| 3 | சென்னை பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப்பகுதிகளில் சாலைகள் அமைத்தல் மற்றும் இதர அடிப்படை வசதிகளுக்கான பணிகள் | 24.31 | முன்னேற்றத்திலுள்ளன |
| 4 | தஞ்சையில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவின் கீழ் நிறைவேற்றப்படும் வல்லம் திட்டப்பகுதிக்கு குடிநீர் விநியோக அமைப்புகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளுக்கான பணிகள் | 10.65 | பணிகள் தொடங்கப்பட உள்ளன |
| | **மொத்தம் (ஆ)** | **53.38** | |
| | **ஆக மொத்தம் (அ+ஆ)** | **364.80** | |

## 8.4 உறைவிட நிதி

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்குப் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர்களுக்கான வீடுகளை மேம்படுத்துவதற்காக அரசாணை (4D) எண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 21.07.2017–இல் உறைவிட நிதியினை அரசு ஏற்படுத்தியுள்ளது. உறைவிட நிதியிலிருந்து பின்வரும் இனங்களுக்கு நிதி வழங்க முன்மொழியப்பட்டுள்ளது:

i. மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்குப் பங்களிப்பு தொகையில் ஒரு பகுதியினை வழங்குதல்.

ii. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டப் பணிகளுக்குத் தேவையான இடைவெளி நிதியினை வழங்குதல்.

iii. குடியிருப்பு நலச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் இச்சங்கங்களின் திறனை மேம்படுத்தும் பணிகள்.

iv. கல்விக்கான நடவடிக்கைகள்.

v. வங்கிகளில் பெற்ற கடனுக்கு உரிய கால கட்டத்தில் வட்டித் தொகையினைச் செலுத்திய பயனாளிகளுக்கு வட்டிக்கான ஊக்கத்தொகை வழங்கல்.

வீட்டுவசதித் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீட்டின் ஒரு பகுதியினை உறைவிட நிதியிலிருந்து நிறைவு செய்ய 2022-23-ஆம் ஆண்டு வரை ரூ.47.34 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**8.5 அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பராமரித்தல் – புதிய அணுகுமுறை – "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2021 அன்று நடத்தப்பட்ட ஆய்வின் போது, கீழே கூறப்பட்டுள்ள இலக்குகளை அடைய

குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குவதற்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளைக் குடியிருப்போர் நலச் சங்கங்கள் மேற்கொள்வதற்கும் ஏதுவாக **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** என்ற புதிய திட்டம் தொடங்க அறிவுறுத்தப்பட்டது.

i. அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளை, சுத்தமாகவும், நேர்த்தியாகவும் பராமரித்தல்.

ii. பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை உரிய தருணத்தில் மேற்கொள்ளுதல்.

iii. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு உரிய கால அவகாசத்தில் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்

iv. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் குடியிருப்போர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க கூடுதல் அடிப்படை வசதிகள் அமைத்தல்

v. பொது உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல்.

vi. எழுச்சியான குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குதல்.

vii. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு வழக்கமான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொறுப்பினை குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு வழங்குதல்

viii. குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு நிதி அதிகாரம் அளித்தல்.

ix. குடியிருப்புதாரர்களுக்கும் வாரியத்திற்கும் இடையே சுமுகமான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல்.

x. குறை தீர்க்கும் நெறிமுறைகளை எளிதாக்குதல்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் (குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்) அவர்கள் இது தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதற்கிணங்க "குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைப்பதை எளிதாக்கவும், அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சீரிய முறையில் பராமரிக்க, குடியிருப்போர் நலச் சங்கங்களை

ஈடுபடுத்தவும் **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட பராமரிப்புக் கட்டணங்களுக்கு இணையான மானியத்தினைத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாநில அரசு வழங்கும். குடியிருப்போர் நலச் சங்கங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையில் சிறிய பழுதுகள் மற்றும் வழக்கமான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

மொத்தம் 694 குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு, இதுவரை 630 குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுள் 446 குடியிருப்போர் நலச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள சங்கங்களைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடியிருப்போர் நலச் சங்கங்கள் பதிவு செய்வதற்காகச் செலுத்திய கட்டணங்கள் அரசால் ஈடு செய்யப்படுகின்றன.

## 9. சென்னை மாநகரின் நீர்வழிகளை மறுசீரமைத்தல் – நதிகளின் கரைகளில் வாழும் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் வழங்கல்

அடையாறு மற்றும் கூவம் ஆற்றின் கரைகளில் வாழும் குடும்பங்கள், நீர்வளத் துறையால் கணக்கெடுக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் சென்னை நகர நீர்வழிகள் மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, நீர்வளத் துறையின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர்.

கீழே கூறப்பட்டுள்ள நதிகளின் கரைகளில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் மறுகுடியமர்வின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண். | நதிகளின் பெயர்கள் | மறு குடியமர்வு செய்யப்பட வேண்டிய மொத்த குடும்பங்கள் | மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்கள் | மறு குடியமர்வு செய்யப்பட வேண்டிய குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கூவம் | 14257 | 13388 | 869 |
| 2 | அடையாறு | 9539 | 4545 | 4994 |
| | **மொத்தம்** | **23796** | **17933** | **5863** |

கூவம் மற்றும் அடையாறு நதிகளின் கரைகளிலிருந்து 17,933 குடும்பங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறச் சீரமைப்பு திட்டம் மற்றும் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 5,863 குடும்பங்களை மறுகுடியமர்த்துவதற்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. இப்பணிகள் 2023-24ஆம் ஆண்டில் முடிவுறும்.

மறுகுடியமர்வின்போது இடமாற்றுத் தொகை, வாழ்வாதார உதவித் தொகை, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் பிற வாழ்வாதார உதவிகள் நதிக்கரைகளிலிருந்து மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்செலவினங்கள் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் அரசால் ஏற்று கொள்ளப்படுகிறது.

பக்கிங்ஹாம் கால்வாயின் கரைகள், அடையாறு மற்றும் கூவம் ஆற்றில் கலக்கும் சிறு கால்வாய்களின் கரையோரங்களில் வாழும் குடும்பங்களின் மறுகுடியமர்வினை எளிதாக்க, வருவாய்த் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து நில நிர்வாகத் துறையான நீர்வள ஆதாரத் துறையால் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**10. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (SCSP) (2022 – 23)**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின் மூலம் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த நகர்ப்புற ஏழைக் குடும்பங்கள் பயனடைகின்றனர். 2022–23–ஆம் ஆண்டிற்கான SCSP சிறப்பு திட்டத்தினை செயல்படுத்த ரூ.887.60 கோடி மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு (TSP) ரூ.77.49 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியுதவியினை முழுமையாக

பயன்படுத்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் இக்குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் / வீடுகள் கட்டப்பட்டு பட்டியல் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2022–23ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் மேற்கூறப்பட்ட திட்டப்பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதுமாக செலவிடப்பட்டுள்ளன.

## 11. நில உரிமை/ விற்பனைப் பத்திரங்கள் வழங்குதல்

### 11.1 மனைகளுக்கான நில உரிமை

சென்னை மற்றும் 9 நகரங்களில் அரசு மற்றும் பிற துறைகளுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஏழைகளின் வாழ்விடங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புற ஏழைகளுக்கான வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் **"உள்ளது உள்ளபடி"** நிலையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகள் அமைந்துள்ள நிலங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், நகர்ப்புற

ஏழைக் குடும்பங்கள் வாழ்ந்து வரும் மனைகளுக்கான நில உரிமை விற்பனைப்பத்திரங்கள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது. இக்குடும்பங்களுக்குக் விற்பனைப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | சென்னை | இதர நகரங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள் | 1,01,149 | 34,135 | 1,35,284 |
| 2 | விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டவை | 44,097 | 5,346 | 49,443 |
| 3 | விற்பனைப் பத்திரங்கள் வழங்க வேண்டிய மீதமுள்ள குடும்பங்கள் | 57,052 | 28,789 | 85,841 |

## 11.2 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான விற்பனைப் பத்திரங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டடப்பட்ட 1.78 இலட்சம் குடியிருப்புகளுள் 32,247 குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் மீதமுள்ள குடும்பங்களுக்குக் விற்பனைப் பத்திரங்கள் வழங்கும் பணிகள் பின்வரும் காரணங்களால் தாமதமாகின்றது:

i. வாரியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை

ii. உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை

iii. இறந்த ஒதுக்கீடுதாரர்களின் குடும்ப உறுப்பினர்களிடையே சட்டப் பூர்வமான வாரிசு குறித்த சிக்கல்கள்.

iv. அடுக்குமாடி குடியிருப்புகளில் வாடகைமுறை ஒதுக்கீடுதாரர்கள் தவணைமுறைத் திட்டத்தின் கீழ் வர விருப்பமின்மை

v. நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் மற்றும் மேல்முறையீடுகள்.

vi. ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து மனைகளை வசதியானவர்கள் (Non-EWS) விலைக்கு வாங்கியுள்ள நிலை

vii. வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் பெறாமல் நிலுவையாக உள்ளவை.

மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்கள் விற்பனைப் பத்திரங்கள் விரைவாகப் பெற்றிட அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விவரங்களைக் குறிப்பிட்டு நேரடியாகவும் தபால் மூலமாகவும் மனைகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு 23921 வரைவு விற்பனைப் பத்திரங்களும் மற்றும் குடியிருப்புகளுக்கு 54106 வரைவு விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அதனைப் பெற்றுக்கொண்டு வாரியத்திற்கு நிலுவைத் தொகையினை செலுத்தி 2022–2023–ஆம் ஆண்டில் 1232 மனை ஒதுக்கீடுதாரர்களும், 1433 குடியிருப்பு ஒதுக்கீடுதாரர்களும் விற்பனைப் பத்திரங்களைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

### 11.3 நில உரிமை மாற்றத்திற்கான அதிகாரமளிக்கப்பட்ட குழு

நில உரிமை மாற்றத்திற்கான செயல்முறைகளை விரைவு படுத்த அதிகாரமளிக்கப்பட்ட குழு (Empowered Committee) ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழு இதுவரை 294 திட்டங்களுக்கான ஒப்புதல் அளித்துள்ளது, 116 திட்டப்பகுதிகளுக்குத் தேவையான அரசாணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**12. சமுதாய மேம்பாட்டுப் பணிகள்**

மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த கீழே கூறப்பட்டுள்ள சமுதாய மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால், ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வாரியத்தின் ஒருங்கிணைப்புடன் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் 10 வர்த்தக பிரிவுகளில் 7 பயிற்சி நிறுவனங்கள் மூலம் 1596 நபர்களுக்குப் பயிற்சிகளை வழங்க பணி ஆணைகள் வழங்கப்பட்டு, கார் ஓட்டுநர் பயிற்சி நிலை–III, உதவி அழகு சிகிச்சையாளர், பொது உதவியாளர் மற்றும் அழகுக் கலை நிபுணர் போன்ற பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு நகரப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை தையல் பயிற்சி, மண் அள்ளும் கனரக வாகன இயக்குதல் பயிற்சி, மின் பழுது நீக்குநர், ஓட்டுநர் பயிற்சி நிலை–III, கணிணி இயக்குபவர், காட்சிப்பதிவு தொலைக்காட்சி நிறுவுதல் (CCTV), ஆய்வக உதவியாளர், தையல் மேற்பார்வையாளர், தையல் இயந்திரம் இயக்குபவர் போன்ற இனங்களில் 299 நபர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 258 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு தொழில்பிரிவுகளில் 1438 நபர்களுக்குப் பயிற்சிகள் வழங்கியுள்ளது. இவர்களில் பெரும்பாலோனோர் பயிற்சி பெற்ற அதே தொழிலிலும், சுய தொழிலிலும், மற்ற பிரிவுகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

### 12.1 சமூகத் தணிக்கை

பயனாளிகளின் ஒத்துழைப்புடன் திட்டப் பணிகளைச் சிறப்பாக செயல்படுத்த கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டது முதல் ஒருங்கிணைந்து பங்காற்றவும் இதர பணிகளை மேம்படுத்தவும், 9 சமூகப்பணி நிறுவனங்களான சென்னை சமூகப் பணி கல்லூரி, சென்னை கிறிஸ்துவ கல்லூரி, இந்து கல்லூரி, ஸ்டெல்லா மேரி கல்லூரி, பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை சமூக அறிவியல் நிறுவனம், பிஷப் கால்டுவெல் கல்லூரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் லயோலா கல்லூரி ஆகியவற்றால் 27 திட்டப்பகுதிகளில் சமூக தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாகனம் நிறுத்துவதற்கான இடம், திட்டப்பகுதியின் பாதுகாப்பிற்காகச் சுற்றுச்சுவர் மற்றும் வாயிற் கதவு அமைத்தல், காட்சிப் பதிவு தொலைக்காட்சி (CCTV) நிறுவுதல், தனி குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல், இளைஞர்களின் நலன் கருதி விளையாட்டுத் திடல், குடியிருப்போர்

கண்காணிப்பு குழு அமைத்தல் போன்ற இதரப் பரிந்துரைகள் சமூக தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### 12.2 உயர்கல்விக்கான உதவித் தொகை

மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ள பெரும்பாலான குடும்பங்களில் ஆட்டோ ஓட்டுதல், வீடுகளைப் பராமரித்தல், கட்டுமானப் பணிகள், சில்லறை வியாபாரம் மற்றும் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளதால், அவர்களது குழந்தைகளின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் 141 உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.42.30 இலட்சம் கல்வி உதவித் தொகையாக எச்.டி.எப்.சி. வங்கி மூலம் 2021-22 ஆம் ஆண்டில் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேலும், வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் 120 உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு எச்.டி.எப்.சி. வங்கி மூலம் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.39.20 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 12.3 பள்ளிக் கல்வி

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் பள்ளிக் கல்வி மாணவர்களின் கல்வி பயிலும் திறனை மேம்படுத்த தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மாலை நேரங்களில் பயிற்சி வகுப்புகள், கற்கும் மையங்கள் (Study Centre) நடத்தப்படுகின்றன. கல்வி கற்றல், பொருட்கள், எழுது பொருட்கள் மற்றும் சிற்றுண்டி ஆகியவை, கல்வி கற்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதுவரை 1750 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

### 12.4 விளையாட்டு நடவடிக்கைகளில் பயிற்சி


தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கோரிக்கைகளை ஏற்று தன்னார்வ நிறுவனங்கள் காவல் துறை சிறுவர் மற்றும் பெண்கள் சங்கங்கள் மூலம் கபடி, சிலம்பம், பறை, கால்பந்து, கிரிக்கெட், கைபந்து போன்ற விளையாட்டு நடவடிக்கைகளில் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் வாழும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**முடிவுரை**

நகர்ப்புறங்களில் உள்ள அனைத்துக் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கும் அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன் கூடிய வீட்டுவசதி வழங்கவும், திட்டப்பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் இம்மக்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தவும், 2030ஆம் ஆண்டிற்கு முன்னர் **"குடிசைப் பகுதிகளற்ற தமிழ்நாடு"** என்ற நிலையினை அடைந்து **"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"** என்ற நோக்கினை அடைய, இந்த அரசால் தொடர் நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தா.மோ. அன்பரசன்**
**அமைச்சர்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**

# இணைப்பு - I



நிறுவன அமைப்புப் படம்
தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்
தலைவர்
மேலாண்மை இயக்குநர்
இணை மேலாண்மை இயக்குநர்
செயலர்
தலைமைப் பொறியாளர் வடக்கு
தலைமைப் பொறியாளர் கிழக்கு
தலைமைப் பொறியாளர் மேற்கு
தலைமைப் பொறியாளர் தெற்கு
நிதி ஆலோசகர்
உதவி செயலர் (நிர்வாகம்)
உதவி செயலர் (மனைகள்)
உதவி செயலர் (குடியிருப்புகள்)
மேற்பார்வைப் பொறியாளர் வடக்கு – I
மேற்பார்வைப் பொறியாளர் வடக்கு – II
கணக்கு அலுவலர்
மேற்பார்வைப் பொறியாளர் மேற்கு
மேற்பார்வைப் பொறியாளர் தெற்கு
மேற்பார்வைப் பொறியாளர் கிழக்கு – I
மேற்பார்வைப் பொறியாளர் கிழக்கு – II
நிர்வாகப் பொறியாளர் வேலூர், திருவள்ளூர் & கோட்டம் – I
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் – II, கோட்டம் – III & கோட்டம் – IV
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் – V, கோட்டம் – VII & காஞ்சிபுரம்
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் – VII, கோட்டம் – VIII, கோட்டம் – IX & விழுப்புரம்
நிர்வாகப் பொறியாளர் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம் & நாமக்கல்
நிர்வாகப் பொறியாளர் திருச்சி, மதுரை , திருநெல்வேலி & சிவகங்கை
மேற்பார்வைப் பொறியாளர் திட்ட செயலாக்க அலகு (தலைமையிடம்)
நிதி ஆலோசகர் (திட்ட செயலாக்க அலகு)
முதுநிலை திட்ட அலுவலர்
நிர்வாகப் பொறியாளர் திட்டம், தரகட்டுப்பாடு & அ.வீ.தி.
முதன்மை தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர்
நிர்வாகப் பொறியாளர் (திட்ட செயலாக்க அலகு)
தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் (திட்ட செயலாக்க அலகு)
தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் (2 Nos.)

# இணைப்பு-II

## பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் - செயலாக்க நிலை

(ரூ. கோடியில்)

| வ. எண் | மாவட்டம் | திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற் றத்தில் உள்ளவை | தொடங்கப்பட வேண்டியவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | 864 | 72.42 | 864 | 0 | 0 | 65.07 |
| 2 | செங்கல்பட்டு | 6 | 4236 | 474.90 | 480 | 3756 | 0 | 293.98 |
| 3 | சென்னை | 113 | 53824 | 7416.40 | 5688 | 28787 | 19349 | 2835.91 |
| 4 | கோயம்புத்தூர் | 26 | 8688 | 791.50 | 2625 | 6063 | 0 | 443.52 |
| 5 | கடலூர் | 9 | 2092 | 197.30 | 240 | 1852 | 0 | 131.77 |
| 6 | தருமபுரி | 8 | 2520 | 247.08 | 168 | 2352 | 0 | 158.88 |
| 7 | திண்டுக்கல் | 3 | 2136 | 214.62 | 0 | 0 | 2136 | 0.33 |
| 8 | ஈரோடு | 31 | 13010 | 1141.37 | 3432 | 9578 | 0 | 795.52 |
| 9 | கள்ளக்குறிச்சி | 2 | 776 | 75.09 | 0 | 776 | 0 | 49.76 |
| 10 | காஞ்சிபுரம் | 3 | 2864 | 282.63 | 2112 | 752 | 0 | 233.90 |
| 11 | கன்னியாகுமரி | 7 | 1500 | 136.87 | 600 | 768 | 132 | 82.21 |
| 12 | கரூர் | 5 | 1302 | 114.31 | 480 | 672 | 150 | 78.68 |
| 13 | கிருஷ்ணகிரி | 3 | 1008 | 100.80 | 528 | 480 | 0 | 45.27 |

| வ. எண் | மாவட்டம் | திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட வேண்டியவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | மதுரை | 11 | 5200 | 492.15 | 2076 | 2728 | 396 | 360.14 |
| 15 | நாகப்பட்டினம் | 3 | 1364 | 154.89 | 320 | 1044 | 0 | 98.44 |
| 16 | நாமக்கல் | 6 | 3224 | 285.21 | 1856 | 848 | 520 | 184.24 |
| 17 | நீலகிரி | 5 | 872 | 83.51 | 376 | 496 | 0 | 70.90 |
| 18 | பெரம்பலூர் | 1 | 504 | 41.03 | 504 | 0 | 0 | 36.86 |
| 19 | புதுக்கோட்டை | 16 | 5676 | 499.37 | 2688 | 2988 | 0 | 381.71 |
| 20 | இராமநாதபுரம் | 2 | 520 | 44.28 | 256 | 264 | 0 | 46.51 |
| 21 | சேலம் | 8 | 3680 | 335.86 | 436 | 3244 | 0 | 202.11 |
| 22 | சிவகங்கை | 4 | 1508 | 145.01 | 608 | 900 | 0 | 69.63 |
| 23 | தஞ்சாவூர் | 8 | 2705 | 234.89 | 880 | 1473 | 352 | 141.04 |
| 24 | தேனி | 15 | 4017 | 422.49 | 1430 | 2587 | 0 | 283.80 |
| 25 | தென்காசி | 1 | 480 | 48.05 | 0 | 0 | 480 | 0.00 |
| 26 | திருவள்ளூர் | 10 | 8032 | 1052.60 | 0 | 7472 | 560 | 440.42 |
| 27 | திருவாரூர் | 1 | 120 | 11.61 | 0 | 120 | 0 | 4.47 |
| 28 | தூத்துக்குடி | 7 | 1472 | 145.26 | 212 | 1260 | 0 | 58.56 |
| 29 | திருநெல்வேலி | 9 | 4544 | 438.00 | 960 | 2204 | 1380 | 200.22 |
| 30 | திருப்பத்தூர் | 1 | 528 | 48.31 | 528 | 0 | 0 | 40.85 |
| 31 | திருப்பூர் | 13 | 6628 | 556.10 | 4220 | 2408 | 0 | 380.56 |

| வ. எண் | மாவட்டம் | திட்டப் பகுதிகளின் எண்ணிக்கை | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற் றத்தில் உள்ளவை | தொடங்கப்பட வேண்டியவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 32 | திருவண்ணாமலை | 1 | 192 | 17.26 | 192 | 0 | 0 | 13.25 |
| 33 | திருச்சி | 8 | 2380 | 201.39 | 1968 | 412 | 0 | 188.18 |
| 34 | வேலூர் | 7 | 1568 | 149.30 | 704 | 864 | 0 | 119.81 |
| 35 | விருதுநகர் | 3 | 864 | 77.40 | 0 | 864 | 0 | 59.43 |
| **மொத்தம்** | | **358** | **150898** | **16749.29** | **37431** | **88012** | **25455** | **8595.92** |

# இணைப்பு-III

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டம் - செயலாக்க நிலை

(ரூ. கோடியில்)

| வ. எண் | மாவட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட வேண்டியவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 1604 | 49.26 | 1100 | 296 | 208 | 28.78 |
| 2 | செங்கல்பட்டு | 12812 | 386.09 | 5196 | 5828 | 1788 | 148.85 |
| 3 | சென்னை | 15669 | 461.33 | 13054 | 2413 | 202 | 297.04 |
| 4 | கோயம்புத்தூர் | 25243 | 757.83 | 20984 | 3734 | 525 | 481.16 |
| 5 | கடலூர் | 9681 | 298.86 | 5495 | 2929 | 1257 | 145.47 |
| 6 | தருமபுரி | 4886 | 154.16 | 3617 | 1077 | 192 | 82.68 |
| 7 | திண்டுக்கல் | 9754 | 307.00 | 6472 | 2358 | 924 | 150.08 |
| 8 | ஈரோடு | 13142 | 403.12 | 11285 | 1706 | 151 | 250.53 |
| 9 | கள்ளக்குறிச்சி | 2489 | 77.50 | 1192 | 662 | 635 | 31.77 |
| 10 | காஞ்சிபுரம் | 15163 | 456.57 | 7134 | 6357 | 1672 | 206.72 |
| 11 | கன்னியாகுமரி | 23998 | 754.32 | 18901 | 4417 | 680 | 433.33 |

| வ. எண் | மாவட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட வேண்டியவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | கரூர் | 4312 | 134.28 | 2839 | 856 | 617 | 61.45 |
| 13 | கிருஷ்ணகிரி | 3380 | 103.62 | 2646 | 619 | 115 | 60.48 |
| 14 | மதுரை | 25416 | 759.18 | 20099 | 4059 | 1258 | 452.48 |
| 15 | மயிலாடுதுறை | 1503 | 50.35 | 870 | 435 | 198 | 12.62 |
| 16 | நாகப்பட்டினம் | 2140 | 69.99 | 1229 | 821 | 90 | 17.93 |
| 17 | நாமக்கல் | 8904 | 269.37 | 5484 | 1984 | 1436 | 122.92 |
| 18 | பெரம்பலூர் | 1814 | 55.74 | 1231 | 574 | 9 | 32.41 |
| 19 | புதுக்கோட்டை | 5820 | 177.80 | 4112 | 1574 | 134 | 111.65 |
| 20 | இராமநாதபுரம் | 4909 | 150.17 | 3315 | 1386 | 208 | 79.98 |
| 21 | ராணிப்பேட்டை | 10085 | 304.40 | 4931 | 3352 | 1802 | 135.41 |
| 22 | சேலம் | 28957 | 861.76 | 23453 | 5242 | 262 | 547.09 |
| 23 | சிவகங்கை | 3002 | 89.89 | 2502 | 445 | 55 | 56.33 |
| 24 | தென்காசி | 11686 | 372.90 | 8172 | 2896 | 618 | 183.20 |
| 25 | தஞ்சாவூர் | 8692 | 265.96 | 5912 | 2172 | 608 | 137.61 |
| 26 | நீலகிரி | 6879 | 260.04 | 4652 | 1602 | 625 | 109.32 |
| 27 | தேனி | 9190 | 282.30 | 7304 | 1647 | 239 | 159.01 |

| வ. எண் | மாவட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை | தொடங்கப்பட வேண்டியவை | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 28 | திருவள்ளூர் | 42868 | 1290.88 | 19184 | 20642 | 3042 | 582.67 |
| 29 | திருவாரூர் | 2702 | 89.20 | 1588 | 861 | 253 | 18.90 |
| 30 | தூத்துக்குடி | 13184 | 406.65 | 10199 | 2292 | 693 | 226.29 |
| 31 | திருச்சிராப்பள்ளி | 15146 | 449.54 | 10098 | 3978 | 1070 | 257.29 |
| 32 | திருநெல்வேலி | 18193 | 571.15 | 12791 | 4244 | 1158 | 289.54 |
| 33 | திருப்பத்தூர் | 6713 | 203.19 | 4142 | 1897 | 674 | 104.99 |
| 34 | திருப்பூர் | 13450 | 404.77 | 11570 | 1759 | 121 | 258.24 |
| 35 | திருவண்ணாமலை | 6309 | 192.18 | 4409 | 1590 | 310 | 105.08 |
| 36 | வேலூர் | 8455 | 254.65 | 4655 | 2784 | 1016 | 125.69 |
| 37 | விழுப்புரம் | 4804 | 151.04 | 2505 | 1506 | 793 | 66.16 |
| 38 | விருதுநகர் | 5204 | 162.73 | 4078 | 723 | 403 | 85.50 |
| **மொத்தம்** | | **408158** | **12489.77** | **278400** | **103717** | **26041** | **6656.65** |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்னை ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் ரூ.17.63 கோடி மதிப்பீட்டில் 130 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வதற்கு 11.06.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 405.90 கோடி செலவில் 8 மாவட்டங்களில் 15 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 4644 அடுக்குமாடிக் குடியிருப்புகளை 07.12.2022 அன்று திறந்து வைத்தார்கள்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தனி வீடுகள் கட்ட 5430 பயனாளிகளுக்கு ரூபாய் 114.03 கோடி மதிப்பீட்டிலான பணி ஆணைகளை 10.04.2023 அன்று வழங்கினார்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.